கிளையை எங்களுடைய சிவகிரியிலே நிறுவுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தினுடைய கிளை ஒன்றை சிவகிரியில் அமைப்பதற்கு எந்தவிதமான சாத்தியக்கூறுகளும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதையும், சிவகிரியில் இருக்கிற பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து, ஏற்கெனவே நான் குறிப்பிட்டபடி, அரசாணை (பல்வகை) எண் 10, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 3-1-1985-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அங்கே ஒரு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் அமைக்க முன்வருவார்களேயானால் அவர்களுடைய கோரிக்கை அரசால் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 332, திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

332–

மலைவாழ் மக்கள் செம்மறி ஆடுகள் வளர்க்க அரசு கடனுதவி வழங்குதல்.

***24909– திருமதி அ. தி. சரஸ்வதி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மலைப் பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்கள் செம்மறி ஆடுகள் வளர்க்க அரசு கடனுதவி அளிக்குமா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக செம்மறியாடு அலகுகள் அரசு மான்யம் மற்றும் வங்கிக் கடன் உதவியுடன் வழங்கப்படுகின்றன.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் 100 ஆண்டு முதல்வர், மண்ணுள்ளவரை மங்காப் புகழ்பெறும் மக்கள்நல் திலகமாம் நம்மையெல்லாம் வாழவைக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில், தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் வளர்ச்சித் திட்டம், எந்தெந்தப் பகுதியில் செயல்படுகின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் பால்வளர்ச்சித் திட்டம், கீழ்க்கண்ட மலைப்பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றன. சேலம் மாவட்டம் கொல்லி மலை ; ஏற்காடு மலை ; கல்ராயன் மலை ; பச்சை மலை ; அருமுத்து மலை; திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டத்தில் ஜவ்வாது மலை; வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் ஏலகிரி மலை; தர்மபுரி மாவட்டத்தில் சித்தேரி மலை; திருச்சி மாவட்டத்தில் பச்ச மலை; விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் கல்ராயன் மலையில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைகளின் அரசியாம், மாணிக்கத் திலகமாகத் திகழும் இதயதெய்வத்தின் பொற்கால ஆட்சியில் மலைவாழ் மக்களுக்குக் கடன் உதவி கொடுக்கும்போது, முழு மானியமாகக் கொடுக்கப்படுகிறது. அவ்வாறு கொடுக்கப்படும் மானியம் ஒரு வருடத்திற்கு இத்தனை நபர்களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டும் என்று வரைமுறை இருக்கிறதா? அல்லது மனு கொடுப்போர் அனைவருக்கும் முழு மானியத் தொகை வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50% மானியமும் 50% வங்கிக் கடன் மூலமும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வருடத்திற்கு 100 செம்மறி ஆடுகள் அலகுகள் மட்டுமே கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக செம்மறி ஆடுகள் வாங்கிக் கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சிதறிக் கிடக்கின்ற மலைவாழ் மக்கள்- -, தாளவாடி பகுதி, அந்தியூரில் பர்கூர் பகுதி இப்படி அங்கே சிதறிக் கிடக்கின்ற மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கிற அந்தப் பகுதிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்திலே சொல்லி, சிறப்பு நிதித் திட்டத்தில் ஒதுக்கி அந்தப் பகுதிகளுக்கு செம்மறி ஆடுகள் அதிகமாக வாங்கிக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் உதகைப் பகுதியில் உள்ள சாங்கிரில்லா என்ற இடத்தில் ஆடு வளர்ப்பு ஆராயச்சி மையம் இருக்கிறது. ஆனால் நீலகிரி மா்வட்டத்தில் வாழ்கிற மக்களுக்கு, அதுவும் மலைவாழ் மக்களுக்கு ஆடு வளர்ப்பதற்கான அரசுக் கடனுதவி எதுவும் வழங்கப்படுவதில்லை. இனிமேலாவது நீலகிரி மாவட்டத்தில் உள்ள மலைவாழ் மக்களுக்கும் ஆடு வளர்ப்பதற்கான கடனுதவி வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசிலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 333, திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

333-

மன்னார்குடி இராஜகோபாலசுவாமி அரசினர் கலைக் கல்லூரிக்குக் கட்டிடங்கள் கட்டுதல்.

***22349**-திரு. கு. **சீனிவாசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மன்னார்குடி இராஜகோபாலசுவாமி அரசினர் கலைக் கல்லூரியில் கட்டிட வசதியின்றி மாணவ, மாணவியர்க்கு மரத்தடியில் வகுப்பு நடத்தப்படுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், போதிய வகுப்புகளுடன் கூடிய கட்டிடம் எப்போது கட்டிக் கொடுக்கப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி இராஜகோபாலசுவாமி அரசினர் கலைக் கல்லூரிக்கு போதுமான கட்டிட வசதி இருப்பதால், மரத்தடியில் வகுப்புகள் நடத்தப்படுவதில்லை. கட்டிடம் கட்டப்படுவது பற்றிய பிரச்சினை எழவில்லை.